Registered as a Newspaper in Sri Lanka NO. [illegible] 15

# ஐக்கியதீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 31

இதழ் : 8

சித்திரை

1976

## இந்த இதழில்....

- ஆசிரியர் தலையங்கம்
- இந்நாட்டுக் கூட்டுறவுத் துறையில் புதுத்திருப்பம்
- கூட்டுறவுக் கல்வி ஏன் ?
- நாட்டு முன்னேற்றத்தில் நுகர்வோர் கூட்டுறவுகளின் பணி
- வளர்ந்தோர் உளவியல்

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 31 ‖ யாழ்ப்பாணம், சித்திரை 1976 ‖ இதழ் 8


## வளர்முக நாடுகளும் தொழில் நுட்பமும்

மேற்கத்திய நாடுகளிலே உருவான தொழிற்புரட்சி இன்று ஏறக்குறைய உலகெங்கிலும் பரவியுள்ளது. இதன் பயனாக வளர்முக நாடுகளிலே மரபு வழியாக வந்த குடிசைக் கைத்தொழில்களும் கைப்பணி ஆக்கங்களும் நலிவுற்று அழிந்தொழியத் தொடங்கின. மேற்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய இயந்திரங்களைக்கொண்ட தொழிற்சாலைகள் வளர்முக நாடுகளிலே தோன்றலாயின.

இத்தகைய பிரமாண்டமான தொழிற்சாலைகளும் பாரிய இயந்திரசாதனங்களும் தமது வல்லமைக்கும் பெருமைக்கும் சான்று பகருகின்றன என்று வளர்முக நாடுகள் எண்ணிய காலமுண்டு. ஆனால் போதிய செல்வமின்றி, செல்வங்கொழித்த நாடுகளைப் போன்று வாழ முனைவது எவ்வளவு போலியானது, எவ்வளவு ஆபத்தானதும் கூட என்பதை அனுபவம் எமக்கு இன்று கற்றுத்தந்துள்ளது. 'விரலுக்கு ஏற்ற வீக்கம்' என்ற எமது மூதாதையர் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மையை மனதிற் கொண்டிருந்தோமானால் நாம் மண் கவ்வியிருக்க வேண்டியதில்லை.

எமது சூழலுக்கும் நிலைக்கும் உகந்தவாறு தொழிற்சாலைகளை அமைக்காது, மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றியதன் விளைவாக எமது பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் என்பதைப் போன்று ஒரு சிலருக்கு இதனால் கொழுத்த ஆதாயம்.

இதில் வேடிக்கை என்னவெனில்; மேற்கத்திய நாடுகளிலேயே தொழில் நுட்பம்பற்றி மீள் ஆய்வு செய்ய சில வல்லுனர்கள் தலைப்பட்டுள்ளனர். 'சிறியதே அழகானது' என்ற தலைப்பில் கலாநிதி 'ஸ்குமாக்கர் (இங்கிலாந்தின் தேசிய நிலக்கரிச் சபையின் முன்னைநாள் தலைவர்) எழுதிய நூல் இப்புதிய சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

வளர்முக நாடுகள் தமக்கு ஏற்ற தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என வாதிடும் அவர், இந்நாடுகளுக்கு உகந்த தொழில்நுட்பம் இடைப்பட்ட தொழில்நுட்பமே என வலியுறுத்துகின்றார். இதனை நடைமுறையிலும் சாதித்துக் காட்டியுள்ளார்' அவர் நிறுவியுள்ள 'இடைப்பட்ட தொழில் நுட்பக்குழு' பல ஆபிரிக்க நாடுகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்களைக் குறைந்த செலவில் உருவாக்கிக் கொடுத்துள்ளது. இத்திட்டத்திலுள்ள நன்

மைகள் பல: அதிக அந்நிய செலாவணி தேவையில் உள்ளூர்க்காரரே இவற்றினை உற்பத்தி செய்வதற்கு எளிதில் பழகிக் கொள்ளலாம். இதனால் மரபு வழி வந்த உள்ளூர்த்திறமைகளை நாட்டின் முன்னேற்றத்திற்காகச் செம்மையாகப் பயன்படுத்துவதற்கு வழி பிறக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு நாட்டின் விசேட சூழ்நிலைக்கு ஏற்றவாறு தொழில் நுட்பம் அமைகின்றது.

இதை ஒத்த இலட்சியங்களை எய்துவதற்கு இலங்கை அரசின் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் திட்டம் முனைந்துள்ளது என்பதை உணரும்போது நாம் பெருமைப்படுவது நியாயமே. 1971 இல் வகுக்கப்பட்ட இத்திட்டம் கூட்டுறவு இயக்கத்தினூடாகச் செயற்பட்டு வருகின்றது. உள்ளூர் வளங்களை, உள்ளூர்த்திறமைகளைப் பயன்படுத்தி வரும் இச்செயற் திட்டங்கள் அன்னிய செலாவணியை மீதப்படுத்துவதோடு, உள்ளூரிலே வேலை வாய்ப்புக்களைப் பெருக்கியுள்ளன. இதனால் வேலைவாய்ப்புக்களைத் தேடி கொழும்பை நோக்கிப்படையெடுத்தல் ஓரளவு குறைந்திருக்கின்றது எனலாம்.

இத்திட்டம் செயற்படத் தொடங்கி 5 வருடங்கள் ஆகிவிட்டன. ஏறக்குறைய 83 வகைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன: உணவுப் பொருட்களைப் பதனிடுவது தொடக்கம் சிறு பொறியியல் பொருட்களை உற்பத்தி செய்வது வரை அபிவிருத்திச் சபைத்திட்டங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை நடைமுறையிலுள்ள திட்டங்களின் தொகை 1000. ஏறக்குறைய 20,000 பேருக்கு இவை வேலை வாய்ப்புக்களை அளித்துள்ளன.

இவ்வாண்டு மேலும் 1000 திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவை செயற்படத் தொடங்கியதும் மேலும் 20,000 பேருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டம் கணிசமான வெற்றி ஈட்டியுள்ளபோதிலும், இதற்குப்போதிய விளம்பரம் கொடுக்கப்படவில்லையெனலாம். பெரும்பாலான மக்களைப்பொறுத்தவரை, இத்திட்டம் குடத்தினுள் ஏற்றிய விளக்காகவே இருக்கின்றது.

இந்நிலையை உணர்ந்துதான் போலும், பார்வள கூட்டுறவுச் சங்க சமாசத்தின் ஆதரவில் அபிவிருத்திச்சபை வணிக நிலையம் ஒன்று அண்மையில் கொழும்பில் திறக்கப்பட்டது. இந்நிலையம், மாவட்ட அபிவிருத்திச் சபை திட்டங்களின்கீழ் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு பேருதவியாயிருக்கும். உள்ளூரில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் கூட இப்பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்கு இந்நிலையம் உத்தேசித்துள்ளது.

கூட்டுறவு இயக்கம் கள்வரின் குகை என்ற அவதூறினை துடைப்பதற்கும், நாட்டின் அபிவிருத்தியில் கூட்டுறவு இயக்கம் அரசுடன் சமபங்காளி என்பதை நிலைநாட்டுவதற்கும், இந்நிலையம் வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

# இந்நாட்டுக் கூட்டுறவுத் துறையில் புதுத் திருப்பம்

(பஞ்ச கொள்கைகளினுல் கூட்டுறவுத் துறையை மீண்டும் சீர மைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட கூட்டுறவு அதிகார சபை முறை இந்நாட்டில் உருவாக்கப்படு கின்றது.)


மாண்புமிகு எஸ். கே. கே. சூரியாராச்சி

(உணவு, கூட்டுறவு, சிறுகைத்தொழில் அமைச்சர்)

தமிழாக்கம்: எம். கே. எம். நாளிர்

(ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபை, கொழும்பு)


1911ம் ஆண்டில் கடனுதவி சங்கங்களாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் கூட்டுறவுத் துறை இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் விரைவான முறையில் விஸ்தரிக்கப்பட்டு 1945ம் ஆண்டளவில் ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களை (நுகர்வோர்) கொண்ட ஒரு துறையாக மாற்றமடைந்தது. காலத்திற்கு காலம் பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் தாம் அனுசரித்த அரசியல் கொள்கைகளுக்கேற்ப கூட்டுறவுத் துறையை முன்னேற்றுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1957ம் ஆண்டில் ''பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முறை'' ஆரம்பிக்கப்பட்டது. இம்முறை 14 வருடங்கள் செயற்பட்டதன் பின்னர் 1971ம் வருடத்தில் ''கூட்டுறவு மறுசீரமைப்பு அல்லது புனரமைப்பு'' மேற்கொள்ளப்பட்டது. புதுத் திருப்பத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப் பின்கீழ் தீவு முழுவதிலும் இருந்த பல்லாயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு 365 அளவிலான ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. புதுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணிப்பாளர்களை நியமனஞ் செய்யும்போது, ஒரு பிரிவினரை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யவும், இன்னொரு பிரிவினரை நியமனஞ் செய்யவும் சந்தர்ப்பமளிக்கப்பட்டது. இவ்விரு முறைகளின் மூலம் அவ்வப்பிரதேச பொது மக்கள் மத்தியிலிருந்து, பொது மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களும், தொழிற் தகைமையும், அனுபவமும் உடைய நேர்மையான கூட்டுறவாளர்கள் பணிப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

## 1975ம் ஆண்டு கடைசிப் பகுதியில் நிலைமை

1975 செப்டம்பர் மாதம் நான் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சராகப் பதவி ஏற்றபோது புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டு ஐந்து வருடங்கள் கழிந்திருந்தது. எந்த ஒரு விடயத்தையும் ஆரம்பித்து செயற்படுத்தி ஒரு சில காலங்களுக்குப்பின் அதன் பிந்திய வரலாற்றை கவனத்திற்கொண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளல் யாவரும் அறிந்த சாதாரண ஒரு நிகழ்ச்சியாகும். இதன் பிரகாரம் நான் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சராகப் பதவி ஏற்றதும் இலங்கையின் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த அளவில் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றார்கள் என்பதை அறிய முயற்சி செய்தேன். இதற்காக பல துறைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து இது சம்பந்தமாக போதிய பரந்த ஆழ்ந்த முறையிலான ஆய்வினை மேற்கொண்டேன். பொதுமக்கள், பிரதிநிதிகளிடமிருந்தும், கூட்டுறவுத் திணைக்களத்திடமிருந்தும், நேராக கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து கொண்டேன்.

எனக்குக் கிடைத்த தகவல்களும், புள்ளி விபரங்களும் என்னைப் பெருமளவில் அதிர்ச்சியும், புதுமையும் அடையச் செய்தன. அப்போது இலங்கையிலிருந்த ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களில் பல சிறந்த முறையில் செயற்பட்டுக் கொண்டு வந்த போதிலும், பெரும்பாலானவற்றின் நிலைமை கவலைக்கிடமாகவிருந்தது. தீவு முழுவதிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 1/3 பகுதியளவு மொத்தத்தில் நஷ்டத்தில் இயங்கின. பொது மக்களுக்குப்பங்கீடு செய்யவேண்டியிருந்த அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களைக் கூட கொள்வனவு செய்து கொள்ள சக்தியற்ற நிலையை சில சங்கங்கள் அடைந்திருந்தன. பொது மக்களுக்கு கிழமைக்கொருமுறை கட்டாயமாக பங்கீடு செய்ய வேண்டியிருந்த பங்கீட்டரிசியைக்கூட சில சங்கங்கள் குறித்த தினத்திற்குப் பல தினங்களுக்குப் பின்பாக பங்கீடு செய்திருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாக விடயங்கள் எவ்வளவு தூரம் கீழ் நிலையை அடைந்திருந்ததெனின், 1974ம் ஆண்டு கடைசிப் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் பண்டச் சோர்வு, முதல் சோர்வு என்பனவாக மொத்தம் நானூற்றறுபத்து மூன்று (463) இலட்சத்திற்கு மேலாகச் சோர்வு ஏற்பட்டது. 1975ம் வருடக் கடைசிப் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் பண்ட, முதல் சோர்வு மேலெழுந்தவாரியாக ஐஞ்னூற்றிருபத்தைந்து (525) இலட்சமாகும்.

நான் மேற்குறிப்பிட்டவாறு பல துறைகளிலிருந்தும் கூட்டுறவுத் துறையின் நிலைமை பற்றி அறிந்துகொண்டதன் பின்னர், அவை சம்பந்தப்பட்ட சகல விடயங்களை பிரதம மந்திரிக்கும், அரசாங்கத்திற்கும் சமர்ப்பித்து கூட்டுறவுத் துறையில் ஒரு புதுத் திருப்பத்தினை ஏற்படுத்தத் தீர்மானித்தேன். இதன்

மூலம் நான் 1971ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பினை ஒத்த ஒரு மறுசீரமைப்பினை மேற்கொள்ள முயற்சிக்கவில்லையெனினும், ஆரம்ப மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து மேலும் முன்னேறுவதற்குச் செய்கின்ற ஒரு முயற்சியாகும். அதாவது 1971ம் ஆண்டு மறுசீரமைப்பினை மேலும் விஸ்தரிப்பதாகும்.

## புது வேலைத் திட்டம்

கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இத்துறையைப் பொறுத்த எனது நோக்கம் ஐந்து வகையிலானது. எதிர்காலத்தில் இந்தப் பஞ்ச கொள்கையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றேன்.

1. சிறந்த முறையில் நுகர்வோரைத் திருப்திப்படுத்தல்.
2. கூட்டுறவு ஊழியர் திருப்தி.
3. சகல கூட்டுறவுச் சங்கங்களையும், விரும்பத்தக்க (சிறந்த) பொருளியல் கூறுகளாக மாற்றுதல்.
4. மாவட்ட மொத்த பண்டகளஞ்சிய முறை.
5. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு (பலநோக்கு) சிறந்த தலைமையைப் பெற்றுக் கொடுத்தல்.

இவ்வைந்து கொள்கைகளையும் சிறந்த முறையில் செயற்படுத்தல் எனது கடமையாகும்.

## கூட்டுறவுச் சங்கக் கிளைகளை நவீனப்படுத்துதல்

இன்று பெருமளவில் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ''அரசாங்க பண்ட பங்கீட்டு நிலையங்கள்'' அல்லது ''கூப்பன் கடை'' களாக இருக்கின்றனவேயன்றி விற்பனை நிலையங்களாக இல்லை. நுகர்வோரை முடிந்தளவில் ஈர்த்து அவர்களது தேவைகளைச் சிறந்த முறையிலும், நேர்மையாகவும் விநியோகம் செய்கின்ற நிலையங்களாக இக்கிளைச் சங்கங்கள் பொது மக்களால் ஏற்கப்படுவதில்லையென்பதை நான் இங்கு விசேடமாகக் குறிப்பிடத் தேவையில்லை. இதற்கு நிவாரணம் வழங்க விரைவான ஒரு திட்டத்தினை நான் ஆரம்பித்துள்ளேன். கொழும்பு மாநகரத்திலும் அதனை அடுத்துள்ள பிரதேசத்திலும் 21 ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் கீழுள்ள 500 கரு மேற்பட்ட கிளைகளை மூன்று மாதத்திற்கு உட்பட்ட காலப் பிரிவிற்குள் நவீனப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். கிளைச் சங்கங்களில் கட்டடங்களைப் பழுது பார்த்து, கியூவரிசைகளை இல்லாமல் செய்து, பங்கீட்டுப் பொருள்கள் அல்லாதவற்றினையும் இவற்றின் மூலம் விற்பனை செய்ய வேண்டுமென்பது எனது கொள்கையாகும். பொதுமக்களைக் கவரக்கூடிய வகையில் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைத்தல். அதாவது விற்பனைப் பொருட்களை சிறந்த முறையில் காட்சிப்படுத்தல், பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குதல் முடிந்தளவில் பொதுமக்களைத் தம்பால் ஈர்த்தல் என்பன மூலம் பங்கீட்டுக்கு அல்லாத பொருட்களையும்

ஆகக் கூடியளவு விற்பனை செய்தல் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். சுருங்கக் கூறின் குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் சிறந்த சேவை மூலம் ஆகக் கூடிய பண்டங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையங்களாக கூட்டுறவுச் சங்கங்களை மாற்றுதல் எனது நோக்கமாகும். இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் கொழும்பிலும், கொழும்பைச் சுற்றியுள்ள இடங்களிலும் மூன்று மாதத்திற்குள் முடிவு செய்ய எதிர்பார்க்கின்ற நவீனப்படுத்தும் வேலைத் திட்டத்திற்கு மேலதிகமாக தீவின் சகல பிரதேசங்களிலும் திட்டங்களை மேற்கொண்டு 1976 ம் ஆண்டிற்குள் எல்லா கிளைகளையும் நவீனப்படுத்துவது எனது நோக்கமாகும். இதன் பொருட்டு கூட்டுறவுத் திணைக்களத்தின் உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுமுள்ளன.

## கூட்டுறவு ஊழியர் பிரச்சினை

சிறந்த ஒரு கூட்டுறவுச் சேவையை நடைமுறைப்படுத்துவதாயின், அதில் கடமை புரிகின்ற ஊழியர்கள் திருப்திப்படுத்தப்படல் வேண்டும். கூட்டுறவு ஊழியர் பிரச்சினைகளை நான் பரந்த முறையிலும், ஆழ்ந்த முறையிலும் ஆராய்ந்துள்ளேன். இதன் பிரகாரம் எதிர்காலத்தில் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன். கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சம்பந்தமாகப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென என்னால் எனது அமைச்சின் செயலாளரின் தலைமையின்கீழ் நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை எனக்குக் கிடைத்துள்ளது. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் விவகாரங்களை விரைவில் மையப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். சென்ற காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கேற்ப, கூட்டுறவுச் சங்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட ஊழியர் தொகை திருத்தி அமைத்து, அங்கீகரிக்கப்பட்ட புது ஊழியர் தொகையின்கீழ் சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் கடமை புரிகின்ற தற்காலிக அமைய ஊழியர்களை அவர்களது தகமைகளுக்கேற்ப நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு சில பணிப்பாளர் சபையினரின் பொறுப்பற்ற செயல்களினால் விரக்தியும், துன்பமும் அடைந்துள்ள ஊழியர்களுக்கு விரைவாக நிவாரணம் அளிக்கப்படும். ஊழியர்களது தொழில் நிலையை நிரந்தரப்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் சிறந்த ஒரு வேலைத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். குறைந்த தரத்திலுள்ள ஊழியர்களுக்கு ஒரே மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இடமாற்றம் பெற்றுக் கொள்வது சம்பந்தப்பட்ட சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்படுகின்றது. நிருவாக மட்டத்திலுள்ள ஊழியர்களுக்கு மாவட்டத்திலுள்ளும், தீவின் எந்தப் பகுதியிலும் இடமாற்றமொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமாக எனது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### ஊழியர் சேமலாப நிதி

ஊழியர் சேமலாப நிதியினை முறைப்படி இதுவரை அரசாங்கத்திற்குச் செலுத்தாமலிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களின்பால் தற்பொழுது என் கவனம் திருப்பப்பட்டுள்ளதுடன், அந் நிதியினை முறைப்படி செலுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

### ஊழியருக்கான வசதிகள்

கூட்டுறவுக் கிளைகளை நவீனப்படுத்துவதில் கட்டடங்களைப் பழுது பார்க்கும்போது, ஊழியர்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, வசதிகளை சம்பந்தப்பட்ட நிலையங்களில் வழங்கும்படி நான் உத்தரவிட்டுள்ளேன்.

### ஊழியர்களை ஊக்குவித்தற்கான கொடுப்பனவு

பங்கீட்டுப் பொருள்களைத் தவிர்த்து அவற்றுள் அடங்காத ஏனைய பொருள்களை விற்பனை செய்வதில் கிடைக்கின்ற இலாப விகிதத்திற்கேற்ப ஊழியர்களை ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவினை அவர்களது சம்பளத்திற்கு மேலதிகமாக மாதாந்தம் வழங்குவதற்கு சில கூட்டுறவுச் சங்கங்கள் தற்பொழுது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. 1976ம் வருடத்தில் இக் கொடுப்பனவு முறை தீவின் சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் நடைமுறையிலிருக்கும்.

### விரும்பத்தக்க பொருளியற் கூறு

தீவிலுள்ள பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் விரும்பத்தக்க பொருளியற் கூறுகளாக மாற்றப்படவில்லை. பலவிதப்பட்ட தலையீடுகள், முக்கியத்துவமற்ற கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன், விரும்பத்தகாத பொருளியற் கூறுகளாக இவற்றுள் பல ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் மாற்றப்பட்டுள்ளன. ஆதலால் சகல கூட்டுறவுச் சங்கங்களையும் விரும்பத்தக்க பொருளியற் கூறுகளாக மாற்றும் நோக்கத்துடன் தற்பொழுது சிறு அளவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்பட்டு பெருமளவிலான கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்படும். இப்பொழுதுள்ள நிலை எவ்வளவு தூரம் திருப்திகரமாக இல்லையெனின், ஒரு இலட்சத்துக்கு குறைந்த அளவிலான சனத்தொகையுடைய ஒரு தொகுதியில் எட்டு ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. அப்புதுக் கொள்கையின் கீழ் தற்பொழுது தீவு முழுவதிலுமுள்ள 350 அளவிலான கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து 250க்குக் குறைவாக மாற்றமுடியும். இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்படுவதன்மூலம் அவற்றை விரும்பத்தக்க பொருளியற் கூறுகளாக மாற்ற எதிர்பார்த்துள்ளோம். இதனைத் தவிர்த்து எந்தவித கட்சி, மத அல்லது வேறு விடயங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டாமென்பது எனது உத்தியோகத்தர்களுக்கு வன்மையான முறையில் ஆலோசனை வழங்கியிருக்கின்றேன்.

### மாவட்ட மொத்த களஞ்சிய முறை

கூட்டுறவுச் சங்கங்களுக்கு அத்தியாவசியமான பங்கீட்டுப் பொருட்களையும், பங்கீட்டுக்கு அல்லாத பொருட்களையும் பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்க வேண்டியுள்ள எண்ணற்ற பிரச்சினைகளை (தடைகளை) கருத்திற் கொண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்காக இப்பொழுதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒழுங்கான முறையில் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல் சம்பந்தப்பட்ட திட்டமொன்றினை தயாரிக்கும் நோக்கத்துடன் தற்பொழுது திருக்கோணமலை மாவட்டத்தில் பெருமளவில் பரீட்சார்ந்த வேலைகள் நடத்தப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டுள்ள நடைமுறை பொருட் கொண்டு செல்லல் பிரச்சினைகளை உங்களுக்குத் தெளிவாக விளங்கும் பொருட்டு சில உதாரணங்களை எடுத்துக் கூற விரும்புகின்றேன். தீவிலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களும் சீனியைப் பெற்றுக் கொள்வதற்காகக் கொழும்பிலுள்ள மனிங் வியாபாரச் சந்தைக்கு வர வேண்டும். சீமெந்தினைப் பெற்றுக் கொள்ள காலி, புத்தளம் அல்லது காங்கேசன்துறைக்கு செல்ல வேண்டும். கறி உப்பினைப் பெறுவதற்காக ஹம்பாந்தோட்ட, புத்தளம் அல்லது ஆனையிறவிற்கு செல்லவேண்டும். இவற்றால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு (தேவையற்ற) அனுவசியமான பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அவ்வாறே அவற்றின் கொண்டு செல்லற் (பொருட்களை) பிரச்சினைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. ஆதலால் என்னால் திருக்கோணமலை மாவட்டத்தில் கூட்டுறவு மாவட்ட மொத்த களஞ்சிய முறை பரீட்சார்த்த அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப் படுகின்ற சகல பொருட்களையும், மாவட்ட மொத்த களஞ்சியங்களிலிருந்து பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் செய்யப் படும். இவ்வருடத்திற்குள் 19 மாவட்ட மொத்த களஞ்சியங்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றேன். முடிந்தவரையில் புகை வண்டி மூலம் பொருட்களைக் கொண்டு செல்லுதம், பொருட்களை ஏற்றி, இறக்கும் செயலை முடிந்தளவில் குறைத்தலும் இதன் முக்கிய இலட்சணங்களாகும். இதனால் தற்பொழுது கூட்டுறவுச் சங்கங்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளுள் பெரும்பாலான (நடைமுறைப் பிரச்சினைகள் உட்பட) குறைவடைவதுடன் அவற்றின் கொண்டு செல்லற் பிரச்சினைகளும் பெருமளவில் குறைவடையும்.

### கொண்டு செல்லற் பிரச்சினைகள்

கூட்டுறவுச் சங்கங்களின் பொருட் கொண்டு செல்லற் பிரச்சினைகளை மேலும் நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான லொறி வண்டிகளில் ஒரு தொகையினை விரைவில் இறக்

குமதி செய்ய அரசாங்க அனுமதி வேண்டப்பட்டுள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான வாகனங்களுக்கு தேவைப்படும் உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்வதில் உள்ள தடைகளும் நீங்கும் பொருட்டு தேவையான உதிரிப்பாகங்களை விரைவில் வரவழைப்பதற்கான ஒரு திட்டத்தினை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

## மாவட்டங்களுக்கிடையே பண்டப் பரிமாற்றம்

மாவட்ட கூட்டுறவு மொத்த களஞ்சிய முறையினை ஒழுங்கு படுத்தியதன் பின்பு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நுகர் பொருட்களை ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு கொண்டு செல்லவும், மாவட்டங்களிடையே பண்டப் பரிமாற்று முறை ஒன்றினை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கின்றேன். உதாரணமாக கொழும்பு மாவட்டத்தில் தேங்காய், வெற்றிலை, அன்னாசி என்பன பெருமளவில் உற்பத்தியாகின்றன. நுவரெலியாவில் உருளைக் கிழங்கு மற்றும் காய்கறி வகைகளும், யாழ்ப்பாண மாவட்டத்தில் மிளகாய், வெங்காயம் என்பனவும் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. புதுத் திட்டத்திற்கமைய கொழும்பு மாவட்டத்தின் உற்பத்திப் பொருட்கள் புகைவண்டி மூலம் அல்லது கூட்டுறவு லொறிகளின் மூலம் ஏனைய மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படும். ஏனைய மாவட்டங்களின் உற்பத்திப் பொருட்கள் கொழும்பு மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். இதன் மூலம் விவசாயிகளது (உற்பத்தியாளரது) உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன், நுகர்வோருக்கும் நியாயமான விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதனால் தற்பொழுது விவசாயிகளையும், நுகர்வோரையும் சுரண்டி வாழ்கின்ற தரகர்களிடமிருந்து நுகர்வோரை மாத்திரமன்றி உற்பத்தியாளர்களையும் காப்பாற்ற கூட்டுறவுத் துறைக்கு முடியும்.

## கூட்டுறவு மாவட்ட அதிகார சபை

ஆரம்பத்திலிருந்து என்னால் குறிப்பிடப்பட்டவாறு திறமையற்ற நிருவாகம், மோசடி, வஞ்சகம், சில சந்தர்ப்பங்களில் தேவையற்ற அரசியல் தலையீடு என்பவற்றால் பெருமளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட முடியாத நிலையில் கடன்பட்டு இழிநிலையை அடைந்துள்ளன.

இந்நிலையிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களை உடனடியாக விடுவித்து பொதுமக்களுக்கு ஆகக் கூடிய சேவையை வழங்கும் நோக்கத்துடனும் கூட்டுறவுத் துறையை சரியான பொதுமக்கள் துறையாக மற்றும் அபிலாஷையுடன் பிரதமர் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி அவர்கள் அவசர காலச் சட்டத்தின் கீழ் எனக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளார். இதன் பிரகாரம் தற்பொழுது அவசரகால சட்டத்தின் கீழ் 22 மாவட்ட அதிகார சபைகள் நிறுவப்பட்டுள்ளன. அரசாங்க அதிபர்களின் தலைமையின்கீழ்

நிறுவப்பட்டுள்ள இச்சபைக்கு அந்தந்த மாவட்டங்களின் கூட்டுறவு நடவடிக்கைகள் சம்பந்தமாக பரிசீலனை செய்து முடிவெடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதனுல் இதுவரை கொழும்பிற்கு மையப்படுத்தப்பட்டிருந்த நிருவாக அதிகாரங்கள் சகல மாவட்டங்களுக்கும் மையப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடயம் பற்றி கலந்துரையாடுவதற்காக ஒரு சில நாட்களுக்கு முன்பு பிரதமர் அவர்களின் தலைமையின்கீழ் கொழும்பில் நடாத்தப்பட்ட அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற திறமையற்ற சங்கங்களை உடனடியாக கடன் நிலையிலிருந்து விடுவித்து பொதுமக்களுக்கு சிறந்த சேவையை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் அவர்கள் சகல அரசாங்க அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கினுர். திறமையற்ற நிருவாகம், மோசடி, வஞ்சகம் போன்ற விடயங்களினுல் கடன்பட்டு கீழ் நிலையடைந்துள்ள சங்கங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்போது எந்த ஒரு சக்திக்கும் கீழ்பணியாது பாரபட்சமற்ற முறையில் தீர்மானங்களை எடுக்குமாறும் பொதுமக்களுக்கு ஆகக் கூடிய சேவையினை வழங்குதல் மாவட்ட கூட்டுறவு அதிகார சபையின் ஒரே நோக்கமாக இருக்க வேண்டுமெனவும் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் அரசாங்க அதிபர்களுக்கு என்னுல் எடுத்துரைக்கப்பட்டது.

## பரீட்சார்த்த முறை

மேற்கூறப்பட்டுள்ளவாறு இதுவரை அமைச்சரிடமும், ஆணையாளரிடமும் இருந்த அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்டு அரசாங்க அதிபர்களின் தலைமையிலான மாவட்ட அதிகார சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டதன் மூலம் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளை திறமையாகவும் ஒழுங்காகவும் முறைப்படுத்த உடனடியாக வேலைத் திட்டங்களை மேற்கொள்வது இலகுவாகின்றது.

உடனடியாக பலாபலன்களைப் பெற்றுக் கொள்ளும், நோக்குடனும், பரீட்சார்த்த முறையிலும் இந்த மாவட்ட அதிகார சபைகளை பிரதமரின் ஆலோசனையின் பேரில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

## கூட்டுறவுத் தலைமை

1957 வது வருடத்தில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முறை உருவாக்கப்பட்டபோது பலவித நடவடிக்கைகளை மேற்கொள்வது அவற்றின் நோக்கமாக இருந்தது. எனினும் 1958ன் பின்னர் வெவ்வேறு விடயங்கள் சம்பந்தமாக வெவ்வேருன கூட்டுறவுச் சங்கங்கள் மேலும்மேலும்பெருகின. இத்துடன் அவை விரைவாக விஸ்தரிக்கப்பட்டன. இவ்வாறு மீன்பிடி கூட்டுறவுச் சங்கம், கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம், விவசாயக் கூட்டுறவுச் சங்கம், கடன் சங்கம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என வெவ்வேறு விடயங்களுக்காக வெவ்வேறு சங்கங்கள் உருவாகி, பரவலாகி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை விடுத்து இலங்கையில் ஏனைய பலதரப்பட்ட விடயங்களுக்காக ஆயிரக்கணக்கான சங்கங்கள் உருவாயின. அண்மையில் அபி

விருத்தி கூட்டுறவுச் சங்கங்களும் விரைவில் உருவாகி பெருகின. ஆரம்பத்தில் நான் எடுத்துக் கூறியதுபோல் 1971 புனரமைப்பிற்குப் பின்னர் இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெயரிடுவதற்காக அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களினதும், அமைப்பாளர்களினதும் ஆலோசனையின் பேரில் பணிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இவ்வாறு செய்யப்பட்டதற்கு காரணம் அரசியல் கொள்கைகள் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகம் சிக்கலடைவதைத் தடுப்பதற்காகும். இது அரசியல் தலைமை எனவும் சிலரால் கூறப்படுகின்றது. இதனுல் நன்மையும், தீமையும் ஏற்பட்டுள்ளன. அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசியல் தலைமையினுல் நல்ல பலாபலன்கள் கிடைத்துள்ளதுடன், நுகர் பண்டப் பங்கீடு சம்பந்தமாக தேவைப்படுகின்ற முகாமை, விற்பனை விடயங்கள் சம்பந்தப்பட்ட அனுபவ அறிவு சொற்பமாகவிருப்பதனுல் சில கூட்டுறவுச் சங்கங்களில் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைகளை நியமனம் செய்யும்போது கூட்டுறவு மாவட்ட அதிகார சபைகள் இவ்விடயங்களையும் கவனத்திற்கொண்டு, பிரிவிலுள்ள சிறந்த கூட்டுறவாளர்களை இதற்காக தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கும்.

நகரின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடிகாரக் கம்பமொன்று நாலாபக்கங்களிலுமிருந்து வருகின்றவர்களுக்கு மாறுபடாத ஒரே நேரத்தைக் காட்டுவது போல் கூட்டுறவுச் சங்கமொன்றும் நுகர்வோரது நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இயங்க வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு அவசரகாலச் சட்டங்களின் கீழ் மாவட்ட அதிகார சபை முறையை பரீட்சார்த்த முறையில் மேற்கொண்டு அம்முறையிலுள்ள குறைபாடுகளைத் தெட்டத் தெளிவாக அறிந்து அவற்றை நிவர்த்தி செய்து இம் மாவட்ட அதிகார சபை முறையை நிரந்தர சட்ட திட்டங்களின் கீழ் ஏற்படுத்த எதிர்பார்க்கின்றேன். இதன்படி ஆரம்ப, மாவட்ட, தேசிய என்ற மூன்று அடிப்படைகளில் இலங்கை கூட்டுறவுச் சங்கங்கள் நிர்மாணிக்கப்படும். ஆரம்ப மட்டத்தில் தமது திறமையையும், செயற்பாட்டையும் நிரூபிக்கின்ற ஒரு கூட்டுறவாளருக்கு மாவட்ட கூட்டுறவு அதிகார சபைக்கும், அதிலிருந்து தேசிய கூட்டுறவு அதிகார சபைக்கும் நியமனம் பெற எதிர்காலத்தில் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டுமென்பது எனது இலட்சியமாகும். இம்முறை கூட்டுறவுத் துறை முன்னேற்றமடைந்துள்ள உலக நாடுகளில் காணப்படுகின்றது.

மேல் எடுத்துக்கூறிய வகையில் தற்பொழுது கடன்பட்டு இழி நிலையடைந்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்களை அந்த நிலையிலிருந்தும் விடுவித்து, பாவனையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதன் மூலம் அவர்களைத் திருப்திப்படுத்தி, ஊழியர் பிரச்சினைகளையும் விரைவில் நிவர்த்தி செய்வதன் மூலம் அவர்களையும் திருப்திப்

படுத்தி சங்கங்களுக்கு சிறந்த கூட்டுறவுத் தலைமையையும் பெற்றுக் கொடுத்து சகல சங்கங்களையும் விரும்பத்தக்க பொருளியற் கூறுகளாக மாற்றம் செய்து கூட்டுறவுத் துறையைச் சிறந்த பொது மக்கள் துறையாக மாற்றுதல் எனது இலட்சியமாகும். நுகர்வோர் அல்லது பாவனையாளர் திருப்தி கூட்டுறவுத் துறையின் தாரக மந்திரமாக வேண்டும். ஆதலால் எதிர்நோக்க வேண்டியுள்ள பிரச்சினைகள், புது நடவடிக்கைகள் என்பன பற்றி கூட்டுறவு ஊழியர்களுக்கு பரந்த அளவிலான அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் எதிர்வரும் காலத்தில் தீவின் சகல பிரதேசங்களிலும் ஊழியர் கருத்தரங்குகளும், பயிற்சிப் பாடத்திட்டங்களும் மேற்கொள்ளப்படும். இதுவரை இம்மாதிரியான கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள் பல நடத்தப்பட்டுள்ளன. திறமை, நேர்மை என்பவற்றின் சின்னங்களாகவும் கூட்டுறவு ஊழியர்களினால் நடாத்தப்படுவதுமான தீவு முழுவதிலுமுள்ள சிறந்த விற்பனை நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்களாகும் என்ற நிலைக்கு அவற்றை மாற்றம் செய்ய வேண்டுமென்பது எனது நோக்கமாகும். ஆதலால் ''எல்லோரும் ஒருவருக்கு, ஒருவர் எல்லோருக்கும்'' என்ற சிறந்த கூட்டுறவுச் சுலோகத்தினை அடிப்படையாகக் கொண்டு இத்துறையை செயலிலும் ஒரு பொது மக்கள் துறையாக மாற்றும் நோக்கத்துடன் நாம் எடுக்கின்ற இம் முயற்சிக்கு தேசிய உணர்வுள்ள சகலரிடமிருந்தும், சகல கூட்டுறவு ஊழியர்களிடமிருந்தும், சகல தனிப்பட்டவர்களிடமிருந்தும் வேறுபாடுகளை மறந்து முடிந்தளவில் ஆகக்கூடிய ஒத்துழைப்பினை வழங்குமாறு நான் கூட்டுறவுத் துறையின் நாமத்தால் வேண்டுகின்றேன்.

—o—

## யாழ் மாவட்டக்குழு

சென்ற மாதம் 22ந் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்ட வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் மாவட்டக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டனர்.

திருவாளர்கள் சு. கந்தையா (தலைவர்) த. பூ. முருகையா (உப தலைவர்) வை. இராஜசுந்தரம், ஜி. வைத்திலிங்கம், வ. பொன்னம் பலம். வே. கந்தசாமி

## பரந்தன் மாவட்டக்குழு

ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் பரந்தன் மாவட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் மாவட்டக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் இ. பிரேமகாந்தன் (தலைவர்) அ. முருகேசு (உப தலைவர்) சோ. தில்லைநாதன், சு. கனகசபை, க. யோ. ஆசிநாதர்.

# மாவட்ட கூட்டுறவு அதிகார சபை

உணவு, கூட்டுறவு, சிறுகைத்தொழில் அமைச்சர் அவசரகால சட்ட விதிகளின்கீழ், பின்வரும் மாவட்ட கூட்டுறவு அதிகாரசபையினை நியமித்துள்ளார்.

**அம்பாந்தோட்டை**

திரு. K. A. கருணரத்தின, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் D. H. A. பாலசூரியா, D.A. அமரசிங்கா, B. A. சொலமன்ஸ், S. விஜயசூரியா.

**யாழ்ப்பாணம்**

திரு. W. A. விஜயபாலா, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் S. ஜெயகாந்தன், T. கந்தசாமி, V. நடராஜா, P. B. எக்கநாயக்க.

**மன்னார்**

திரு. S. ஜெயநாதன், அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் K. குணரத்தினம், A. C. M. மஹ்றூவ், V. K. முத்துக்கிருஷ்ண.

**வவுனியா**

திரு. N. சிவஞானம், அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் P. கமலநாதன், T. லங்காநேசன், கீர்த்தி சில்வா, D. செல்லக்கண்டு.

**மட்டக்களப்பு**

திரு. G. C. டிசநாயக்கா, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் P. A. V. M. பெர்னன்டோ, K.P. லீலானந்தா, லெஸ்லி குலேந்திரா, செல்வநாயகம், M. N. கபூர்.

அம்பாறை

திரு. W.K.A.V.P. அபேசிங்கி, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் G. P. D. சோமரத்தின, P. C. A. பெர்ணன்டோ, H. R. டி. சில்வா, S. விஸ்வநாதன்.

குருநாகலை

S.B.K. திலகரட்ணு, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் A. S. பெரேரா, R. M. C. P. உடுகம்பொல, H. M. ரணசிங்கி, P. H. எட்வின் சில்வா.

கொழும்பு தெற்கு

திரு. D. G. பிரியசந்திரா, கூட்டுறவு பதில் ஆணையாளர் (தலைவர்) திருவாளர்கள் சிறிவல்கம, J. D. திசநாயக்க, T. R. பெர்ணன்டோ, R. G. ஜெயதிச.

கொழும்பு வடக்கு

திரு. விமல் அமரசேகரா, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் W. கலுபகனு, A. H. ஜெயசிங்க, K.D.J. சிறிவாடினு பசில் பெர்ணண்டோ.

களுத்துறை

திரு. R. S. ஜெயரட்ணு, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் K. கலுபகனு, K. D. C. எக்கநாயக்க, H. ஜெயசிறீ டி சில்வா, U. T. விஜீதானந்தா.

கண்டி

திரு. செனிவரட்ணு பண்டா, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் M. அத்தம்பவல, S B.S. விக்கிரமசிங்கா, M. B. விஜயகூன், M. B. இளங்கூன்.

மாத்தளை

திரு. சிறில் சுமாஜ், அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் D. திசநாயக்கா, A. பிந்துசார, P. P.M. குணதிலகா, S. D. நியான்கொட.

நுவரெலியா

A. E. பண்டிதரட்ண, அரசாங்க அதிபர் (தலைவர்) திவாளர்கள் D. B. தர்மசிறி, எட்வின் குணசேகரா, G. F. அரியானந்தா, W. M. A. விஜயகூன்.

காலி

திரு. பிராட்மன் வீரக்கூன், அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் W. M. கமாஜ், C. ஞானசேன, C. D. சில்வா, D. D. இராமநாயக.

மாத்தறை

திரு. G. P. S. U. டி சில்வா, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் K. M. வீரசேகரா சிறில் வாஸ் குணவாடின, சோமசிறி விஜயசூரியா, ஆரியரட்ண பண்டார இரத்நாயக்கா.

அநுராதபுரம்

திரு. G. B. இலங்சிங்கி, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் S. A. D. மகெகெல்வெல, D.B. மத்தேக்டுவ, D. D. வடமின M. W. பண்டித.

புத்தளம்

திரு. G. B. இராஜபக்ச, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் W. T. வோவ், A. N. கருணரட்ண, K. R. D. S. விஜயரட்ண, D. K. H. S. பிரெட்றி ரெட்றகோ.

பொல்லநறுவா

திரு G. A. குணவாடின, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் A. பொரலுகொட, S. W. அத்துல, W. K. சொலமன், D. H. L. விக்கிரமரட்ண.

மொனராகலை

திரு S. J. சுமணசேகரா பண்டார, அரசாங்க அதிபர் (தலைவர்) திருமதி R. M. சுவர்ணலதா மெனிக்கா திருவாளர்கள் V. ரணசிங்கா, L. B. பியசேன, B. புலத்சிங்கள.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# கூட்டுறவுக் கல்வி ஏன் ?

இ. ஜெகநாதன்
( விரிவுரையாளர் கூட்டுறவுக் கல்லூரி யாழ்ப்பாணம் )

கல்வியின் இன்றியமை யாமைபற்றி வள்ளுவர் மிக அழகாகவும் ஆணித் தரமாகவும் பின்வருமாறு கூறியுள்ளார்: "கண்ணு டையோர் என்போர் கற் றோர் முகத்திரண்டு புண் ணுடையோர் கல்லாதவர்" ஆழ்ந்த இவ்வுண்மை கூட் டுறவுக் கல்விக்குப் பொருந் தும். கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை ஆராயும் போது, வெவ்வேறு மட் டத்தினரின் பின்னணியில் அதனை நோக்க வேண்டும். முதலாவதாக, பொது மக் களை எடுத்துக் கொள் வோம். அவர்கள் கூட்டு றவு இயக்கத்தைப் பற்றி அதன் தத்துவம் நடை முறைகள் பற்றி அறிந்தி ருக்க வேண்டுமா? ஆம் தாவரங்களின் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலை எவ்வாறு அவசியமோ, அவ்வாறே கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்துக்கு சாதக மான சூழ்நிலை உருவாக வேண்டுமாயின் பொதுமக் கள் கூட்டுறவு இயக்கத் தின் இலட்சியங்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். கூட்டுறவுக் கல்வி மூலம் இந்த அறிவைப் பொது மக்களிடையே பரப்பலாம்.

இலங்கையிலே முதன் முதலாக நிறுவப்பட்ட கூட் டுறவுச் சங்கங்கள் கடனு தவு சங்கங்களே அப்பொ ழுது இச்சங்கங்களின் உறுப் பினராக அனுமதிக்கப்பட் டுள்ளனர். உறுப்பினராகச் சேர விரும்பியவர் சங்க உபவிதிகளை நன்கு அறிந் திருக்க வேண்டும் என்ற விதி நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந் தது. இன்றைய நிலையில் இது சாத்தியமில்லாத போதிலும், உண்மையில் முன்னைவிட இன்றுதான் உறுப்பினர்க்குப் பூரண கூட் டுறவு அறிவு தேவைப்படு கின்றது. தமது சங்கத்தின் உப விதிகளை, அதன் நடை முறைகளை, அதனைக் கட் டுப்படுத்தும். சட்டதிட்டங் களை கூட்டுறவுக் கோட் பாட்டை உறுப்பினர்கள்

நன்கு அறிந்திருந்தால் தான் அவர்கள் சங்கம் மீது கொண்டிருக்கும் அக்கறை பயனுடையதாய் இருக்கும். அப்பொழுதுதான் அவர்கள் விஷயம் அறிந்தவர்களாய் இருப்பதோடு சங்கத்தின் செயற்பாடுகளை, அதன் இயக்கத்தைக் கூர்மையாக அவதானிக்க முடியும். எனவே உறுப்பினரின் கண்காணிப்பிற்கும், சுறுசுறுப்பான பங்குபற்றுதலுக்கும் கூட்டுறவுக் கல்வி இன்றியமையாதது.

சாதாரண உறுப்பினர்களை விட, நெறியாளர் குழுக்களுக்கும், கிளைக்குழுக்களுக்கும் கூட்டுறவுக் கல்வி அவசியம். ஏனெனில் இவர்கள்தான் உறுப்பினர்களின் சார்பாக சங்கத்தை நெறிப்படுத்தி மேற்பார்வை செய்பவர்கள். இவர்கள் தான் சங்கம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளையும், நடைமுறைகளையும் வரையறுப்பவர்கள். இவற்றினைச் செம்மையாகச் செய்து சங்கம் திறம்பட இயங்குவதை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமாயின் கூட்டுறவுக் கல்வி அவர்களுக்கு இன்றியமையாதது. சங்கத்தோடு தொடர்பான சகல விஷயங்களையும், அவர்கள் நன்கு கற்று புரிந்துகொண்டால் தான், தமது கடமைகளை அவர்கள் செவ்வனே ஆற்ற முடியும். தமது கவனமின்மையால் ஏற்படக்கூடிய நட்டங்களுக்குத் தனித்தும் ஒருமித்தும் நெறியாளர் பொறுப்பாளிகள் என பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உபவிதி கூறுவதனால், தற்பாதுகாப்பிற்காகவேனும் இவர்கள் கூட்டுறவுக் கல்வியைப் பயில வேண்டியது அவசியம்.

பணியாளரே கூட்டுறவு இயக்கத்தின் முதுகெலும்பு. சங்கத்தின் அச்சாணி எனலாம். ஒரு சங்கத்தை உண்மையாகவே கொண்டு நடத்துபவர்கள் அவர்களே. இதனை ப. நோ. கூ. சங்க உபவிதிகள் வலியுறுத்துகின்றன. நெறியாளர் கொள்கைகளை வரையறுத்து மேற்பார்வை செய்ய, சங்கத்தின் நாளாந்த நிருவாகப் பொறுப்பு பொதுமுகாமையாளரையும், அவருக்குக் கீழுள்ள பணியாளரையும் சார்ந்ததே. சங்கம் ஒரு வியாபார நிறுவனமாக இருப்பதனால், அதனை இலாபகரமாக நடாத்துவது அவசியம். இதற்குப் பணியாளர் முகாமையியல், விற்பனையி

யல், கணக்கியல் போன்ற துறைகளிலே நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். வியாபாரத்தை எவ்வாறு பெருக்கலாம். நட்டங்களை எவ்வாறு தவிர்க்கலாம். மக்களின் தேவைகளை 'எவ்வாறு பூர்த்தி செய்யலாம், வாடிக்கையாளருடன் எவ்வாறு பழக வேண்டும். இவையெல்லாம் பணியாளருக்குத் தெரிந்திருந்தால் தான் சங்கத்தை அவர்கள் செயற்திறத்துடன் நடத்தலாம். சங்கத்தின் உயர்வும், தாழ்வும் பெரும்பாலும் பணியாளர்களின் கைகளிலே தங்கியிருப்பதனுல், கூட்டுறவுக் கல்வி அவர்களுக்கு மிக அவசியம்.

பொது மக்கள் உறுப்பினர், நெறியாளர்—இவர்களுக்குக் கூட்டுறவுக் கல்வி ஏன் இன்றியமையாதது என்பதனை மேலே பார்த்தோம். இக்கல்வி பல்வேறு வழிகளிலே ஊட்டப்படலாம். கருத்தரங்குகள் கூட்டங்கள், போதனுவகுப்புகள், சொற்பொழிவுகள், பயிற்சி நெறிகள், வெளியீடுகள் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு இம்முறைகளைப்பயன் முனைப்பாகக் கையாளலாம்.

(இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட உரை)

---

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

### இரத்தினபுரி

திரு. S. G. சமரசிங்கா, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் K. R. S. W. கருணரட்ணு, M. பத்மசீலா டி. சில்வா, M. G. சிரிசேனு, P. D. இரத்நாயக்கா.

### பதுளை

திரு. T. B. பெகில்லா கெடரா, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் A. ஹெரத்திசா செனறத், டனவெல சுதுபண்டா, இரத்நாயக்கா, H. G. டயஸ்.

### கேகாலை

திரு. Y. H. W. பண்டார, அரசாங்க அதிபர் (தலைவர்) திருவாளர்கள் P. N. கருணரட்ணு, N. P. வியனுராய்ச்சி, D.F. சியபலபிட்டிய, T.K.H.T. குணதிலக்க.

(முற்றொடர்)

# நாட்டு முன்னேற்றத்தில் நுகர்வோர் கூட்டுறவுகளின் பணி

திரு. B. விஜயராகவன், I. A. S.
கூட்டுறவுப் பணியாளர் (தமிழ் நாடு)

## கொள்முதல் கொள்கை

திறமையற்றதும், பொறுப்பற்றதுமான கொள்முதல் கொள்கை தீமை பயக்கக்கூடியதாகும். இந்த சகதியில்தான் அனேக கூட்டுறவுகள் சிக்கி மூழ்கி விடுகின்றன. லட்சோபலட்சம் ரூபாய்க்கு சரக்குகளைக் கொள்முதல் செய்யும் உரிமையும் அதிகாரமும் தங்களிடம் இருப்பதுதான் தங்களுடைய செல்வாக்கிற்கு அடையாளம் என்பதாக பல பண்டசாலை தாபனங்களில் நிருவாகிகள் கருதுகிறார்கள். இது வருந்தத்தக்க விஷயமே. இம்மாதிரி தவறான எண்ணங் கொண்டு நிருவாகிகள் செயற்படுவதால் ஆபத்தான விளைவுகள் நேரிடுகின்றன. சரக்கு கொள்முதல் செய்வதென்பது திறமையுடன் கையாள வேண்டிய ஓர் கலையாகும். ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டவர்களாக உள்ள அனுபவம் வாய்ந்த சம்பள சிப்பந்திகளிடம் இந்தப் பொறுப்பை ஒப்புவிக்க வேண்டும் என்பதை கூட்டுறவு இலாகாவிலுள்ள நாங்கள் அடிக்கடி வற்புறுத்தி வந்துள்ளோம். இது விஷயமாக தங்கள் சிப்பந்திகள் பின்பற்ற வேண்டிய விரிவான கொள்கைகளை வகுத்து நிருவாகிகள் அவர்களுக்கு வழிகாட்டி வர வேண்டும் என்று நாங்கள் குறிப்பிடும் நல்ல ஆலோசனையை துரதிஷ்டவசமாக அனேக நிருவாகிகள் வரவேற்பதில்லை. சர்வதேசக் கூட்டுறவு அலையன்ஸ் நிறுவனம் 1971-ம் ஆண்டில் வியாபார நிருவாக முறை (Business Management in Retailing) சம்பந்தமாக நடத்திய ஆய்வின் அடிப்படையில் அவர்கள் வழங்கிய பரிந்துரையிலும் இதைத்தான் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகையால் இக் கருத்து என்னுடைய

சொந்தக் கருத்தல்ல; சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின் கருத்தாகும். இந்நிறுவனம் நாட்டிலுள்ள கூட்டுறவுகளின் ஜனநாயக உரிமைகளைப் பேணிப்பாது காத்து வரும் முக்கிய நிறுவனமாகும். எனவே, ஜனநாயக விரோதக் கருத்தை நான் கொண்டிருப்பதாக யாரும் குறைகூற மாட்டார்களென நம்புகிறேன். நான் இவ்வாறு கூறுவதால் நிருவாகத்தர்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை என்பது பொருளல்ல. நிருவாக சிப்பந்திகள் என்று நான் குறிப்பிடுபவர்கள் இலாகாவிலிருந்து அனுப்பப் பெறும் அதிகாரிகள் மட்டும் அல்ல; அந்தந்த சங்கங்களில் இருந்து வரும் அதன் சொந்த ஊழியர்களையும்தான் நான் குறிப்பிடுகிறேன். கௌரவ நிருவாகிகள் இந்தப் பணியில் பெரும்பாலும் அனுபவம் இல்லாதவர்கள். கொள்முதல் பணியானது தாபனத்தில் உள்ள சம்பள சிப்பந்திகளால் மேற்கொள்ள வேண்டிய நுட்பமான நடவடிக்கையாகும். மேலும், கௌரவ நிருவாகிகளைப்போல் அல்லாமல், அந்த ஊழியர்கள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்டவர்களாவார்கள். ஆதலால் கௌரவ நிருவாகிகளே கொள்முதல் செய்வதாக இருந்தால், அவர்கள்மீது சரியான கட்டுப்பாடோ அல்லது மேற்பார்வையோ வைத்துக் கொள்வதென்பது இதரசக நிருவாகிகளுக்கு சங்கடமானதும் இயலாததுமான பிரச்சினையாகும்.

நுகர்வோர் கூட்டுறவுகளின் தேவைகளை அறிந்து ஒருங்கு திரட்டி சரக்குகளை ஒட்டு மொத்தமாகக் கொள்முதல் செய்யும் விஷயத்தில் முன்னை விட அதிக் கவனம் செலுத்த வேண்டி உள்ளது. தேசீய நுகர்வோர் கூட்டுறவு இணையம் தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு ஆகிய நிறுவனங்கள் மூலம் ஆரம்ப ஏற்பாடாக இவ்வகையில் சில நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்த தாபனங்கள் ஓர் வரம்புக்கு உட்பட்டுத்தான் செயற்பட வேண்டியிருக்கின்றன. தவிரவும் அனேக சங்கங்கள் சரக்குக் கொள்முதல் சம்பந்தமான தங்களது உரிமையை விட்டுக் கொடுக்க விரும்புவதில்லை. இந்தக் காரணங்களால் மேற்படி இரு தாபனங்களும் இது விஷயமல்லா போதுமான அளவிக பயன்பெற முடியவில்லை. நுகர்வோர் கூட்டுறவுகளின்

கூட்டமைப்புகளை நாம் பலப்படுத்தவேண்டும். அந்த அமைப்புகள், தங்களுடன் இணைக்கப்பட்ட ஆரம்ப சங்கங்களை நிர்ப்பந்தப் படுத்தியோ அல்லது வேறு வகையிலோ அவற்றின் தேவைகளைக் கேட்டறிந்து ஒன்று திரட்டி சரக்குகளை ஒட்டு மொத்தமாக ஒரு பொது ஏஜென்சி மூலம் கொள்முதல் செய்து வினியோகிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இந்த முக்கியமான சேவையின் அவசியம் இப்போது மிகவும் தேவையாக உள்ளது. மூன்று அல்லது நான்கு மாவட்டங்களுக்கு ஒன்று வீதம் வட்டார கூட்டுறவு வேர்ஹவுசிங் கழகங்களை அமைத்து அவை மூலம் அந்தந்த வட்டாரங்களிலுள்ள சங்கங்களின் சரக்குத் தேவைகளை வினியோகிக்கும் ஏற்பாடு செய்வது குறித்தும் நாங்கள் ஆலோசனை செய்து வருகிறோம். அதுபோன்ற ஒரு கழகத்தை கோயமுத்தூரை மையமாகக் கொண்டு அமைக்கும் முயற்சி இப்போது நடந்து வருகிறது. கோயமுத்தூர், நீலகிரி. சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களின் தேவையை அது வழங்கும். ஒட்டு மொத்தமாக வாங்குவது, பருவமறிந்து கொள்முதல் செய்வது, சாக்குகளை சரியானபடி பாதுகாப்பது ஆகியவைதான் திறமை வாய்ந்த கொள்முதல் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். வெளியார் போட்டியை சமாளித்துக் கொண்டு பொது மக்களுக்கு தரமான சரக்குகளை நியாய விலையில் நமது நுகர்வோர் கூட்டுறவுகள் வழங்க வழிவகுக்கும் சிறந்த திட்டமாகும் இது.

சரக்கிருப்பு

நுகர்வோர் கூட்டுறவுகளில் குறிப்பாக சமீப ஆண்டுகளாக, பெருமளவில் சரக்கிருப்புக் குறைவு ஏற்படுவதானது புற்று நோய் போன்று வளர்ந்து வருகிறது. சிப்பந்திகள் செய்யும் சிறு திருட்டுகள் காரணமாக இது ஏற்பட்ட போதிலும், நிருவாகிகளின் கவனக்குறைவு, குற்றமிழைந்தவர் மீது காலத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அவர்கள் தவறுவது ஆகிய காரணங்களால் நிருவாகிகளும் இதற்குத் துணையாகிறார்கள் என்று நான் கூறுவேன். ஊழியர்களிடம் நல்ல பெயரெடுக்க வேண்டும் என்னும் அவா காரணமாக, அநேக தாபனங்களில் உள்ள அரசு அதிகாரிகள் உட்பட நிரு

வாக அதிகாரிகளும் இயக்குநர்களும் இது விஷயமாக இளகிய நோக்கோடு அல்லது மௌனமாக இருந்து விடுகிறார்கள்.

சங்கங்களில் சரக்கிருப்பைச் சரிபார்ப்பது என்பது அடிக்கடியும் ஒரு கால முறைப்படியும் நடைபெற வேண்டும். இதைக் கவனித்துவர வேண்டியது நிருவாகிகளின் பொறுப்பாகும். சரக்கிருப்பு குறைவு ஏற்படும் சந்தர்ப்பங்களில் யார் பொறுப்பாளி என்பதை உடனுக்குடன் நிர்ணயித்து அது சம்பந்தமாகச் செய்ய வேண்டிய பிடித்தங்கள் விஷயமாகத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். தற்செயலாக, அல்லது கவனக் குறைவு காரணமாக சிப்பந்திகளால் ஏற்படும் சரக்குக் குறைவுக்கு அவர்களிடமிருந்து நட்டத் தொகை வசூலிக்க வேண்டியது நியாயமே என்றாலும், ஒரு குறிப்பிட்ட ஊழியர் தமக்கு வழக்கமாக உள்ள அஜாக்கிரதை அல்லது நாணயக் குறைவு காரணமாக மாதாமாதம் இருப்பைக் குறையவிடுவதற்கு அது பரிகாரமாகாது. அதுபோன்ற சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட சிப்பந்தியை வேலையிலிருந்து முதலில், விலக்கிவிடுவது தான் சரியான வழி. நஷ்டத்தை அவரிடம் ஈடு செய்வது என்பது பின்னிட்டுக் கவனிக்கவேண்டிய விஷயம். சிப்பந்திகளால் ஏற்படும் சரக்குக் குறைவு சம்பந்தமான நட்டங்களை மாதா மாதம் ஒவ்வொரு சிப்பந்திக்கும் கணக்கெடுத்து நிருவாகம் ஆராய்ந்து பார்த்து வழக்கமாகத் தவறிழைப்பவர்கள் யார் என்பதையும் தற்செயலாகத் தவறவிடுபவர்கள் யார் என்பதையும் அறிந்து இரு சாரார் மீதும் தனித்தனியாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு சம்பந்தப்பட்ட விற்பனை சிப்பந்திகள் மீது நடவடிக்கை எடுப்பதோடு சங்க இயக்குநர்கள் அல்லது நிருவாக அதிகாரிகள் ஆகியோரின் பொறுப்பு தீர்ந்ததாகக் கருதக்கூடாது. சரக்குக் குறைவேற்படுவதன் காரணங்களைக் கவனமாக ஆராய்ந்தும், குற்றவாளிகள் இது விஷயமாகக் கையாளும் முறைகளைக் கண்டறிந்தும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நிருவாகிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**வியாபாரத் திறன்**

வாடிக்கையாளர்கள்

தான் தங்கள் ஆசான் என்பதை நுகர்வோர் கூட்டுறவுகள் என்றும் மறந்து விடக்கூடாது. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலையின் விற்பனையாளரிடம் மரியாதையான பணியை அல்லது திறமையான சேவையை மக்கள் எதிர்பார்க்க முடியாது என்பதாக ஒரு பொதுவான எண்ணம் நிலவி வருவதானது வருந்தத்தக்கதாகும். கவர்ச்சியில்லாத விற்பனைச் செயல் முறைகள் காரணமாக அநேக நுகர்வோர் கூட்டுறவுகள் செல்வாக்கு இழந்துள்ளன. பொருள் வாங்க வருவோரிடம் தங்கள் சிப்பந்திகள் நடந்துகொள்ளும் பாணியை நிருவாகங்கள் கண்காணித்து வரவேண்டும். மரியாதைக் குறைவாக நடந்துகொள்ளும் ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். விற்பனையாளர், வாடிக்கையாளரிடம் சாதுரியமாக நடந்துகொள்வதால் மட்டும் வியாபாரம் பெருகிவிடாது. சரக்குகளின் சப்ளை தடைபடாது தொடர்ச்சியாக இருந்துவருவதுடன் எந்தெந்த சரக்குகளுக்கு கிராக்கி இருக்கிறது என்பதை அடிக்கடி அறிந்து அவைகளை இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். சிறப்பங்காடிகள் உள்ளிட்ட சில நுகர்வோர் கூட்டுறவுகளில் சில குறிப்பிட்ட சரக்குகளும், குறிப்பிட்ட அளவுகளில் சிப்பங் கட்டப்பெற்ற பொருள்களும் பல நாட்களாக விற்பனைக்கு வைக்கப்படாமலிருந்து வந்துள்ளன. மார்க்கெட்டில் பொதுவாகப் பற்றுக்குறையாக உள்ள பொருள்களைப்பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. பல்வேறு காரணங்களால் போதிய சரக்குகளை இருப்பு வைக்காமல் இருக்கும் குறைபாட்டையே இங்கு நான் குறிப்பிடுகிறேன். கிடங்கிலிருந்து விற்பனைப் பகுதிக்கு வரும் சரக்குகளையும், விற்பனைப் பகுதியிலிருந்து விற்பனையாகும் சரக்குகளையும், பண்டங்கள் வாரியாகவும், சிப்பங்களாகக் கட்டப்பெற்ற பொருள்கள் வாரியாகவும் மேற்பார்வை சிப்பந்திகள் அன்றாடம் நன்கு கண்காணித்துக் கொண்டு அவைகளின் இருப்புகள் போதிய அளவில் கையிருப்பில் வைத்துவர நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் அவற்றின் விற்பனையில் ஒரு போதும் தடை ஏற்படும்படி விடக்கூடாது. தவிரவும், தங்கள் பண்ட

சாலையில் இருப்பில் இல்லாததும் வாடிக்கையாளர்கள் விரும்பிக் கேட்பதுமான பொருள்களின் விபரங்களை விற்பனையாளர்கள் தங்களது குறிப்பேட்டில் குறித்து வைத்துக்கொண்டு அந்தச் சரக்குகளுக்குத் தேவைப்பட்டியல் தயாரித்து அவற்றை அவர்கள் பெற்று வைத்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்யவேண்டும். பலவகையான வியாபாரப் பொருள்கள், குறிப்பாக அழகு சாதனங்கள், வீட்டு உபயோகச் சாமான்கள், மருந்து வகைகள் முதலியன நாள்தோறும் மார்க்கெட்டில் புதுப்புது வகையாக விற்பனைக்கு இப்போது வருகின்றன. இந்த வியாபார முன்னேற்றங்களைப்பற்றியும் பொருள் வாங்குவோரின் தேவைகளைப் பற்றியும் அவ்வப்போது கண்காணித்துக்கொண்டு நுகர்வோர் கூட்டுறவுகள் தங்கள் விற்பனைச் சரக்குகளை வேண்டிய அளவில் இருப்பு வைத்துவரவேண்டும். அதிருப்தியான சேவை காரணமாக மனக்கசப்படைந்து எந்த வாடிக்கையாளரும் தமது ஆதரவை வேறு இடத்துக்கு மாற்றிக்கொள்ள வாய்ப்பளித்தல் கூடாது.

நுகர்வோர் கூட்டுறவுகள் பல்வேறு வகையான விற்பனைப் பொருள்கள், பல்வேறு சிப்பங்களில் கட்டப்பட்ட சரக்குகள் ஆகியவைகளின் இருப்பை போதிய அளவில் தொடர்ந்து வைத்து வருவதுடன், தங்கள் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை இழந்துவிடாமல் காத்துவரவேண்டும். இதற்குத் தங்கள் விற்பனைச் சிப்பந்திகளிடையே இது சம்பந்தமான ஊக்க உணர்வையும் ஏற்படுத்தவேண்டிய சூழ்நிலை உருவாக்க வேண்டியது நமது கூட்டுறவுப் பண்டசாலைகளின் கடமையாகும். இது விஷயமாக இதுவரையில் அவைகள் எடுத்துவந்த நடவடிக்கைகளைத் தீவிரமான அளவில், வருங்காலத்தில், திட்டங்களை வகுத்துச் செயல்புரிய வேண்டியது மிகமிக அவசியமாகிறது. சிப்பந்திகளின் செயல் திறனைச் செம்மைப்படுத்தி விற்பனையை அதிகரிக்க, சிறந்ததும் விவேகமானதுமான ஓர் ஊக்குவிப்புத் திட்டம் அமைய வேண்டியதுதான் நல்லதொரு தூண்டுகோலாகும். நல்ல மனத்திருப்தியுடனும் தாங்கள் பணிபுரியும் தாபன மேம்பாட்டில் மிகுந்த பொறுமையுடனும் அவர்கள் செயலாற்றவும் அது வகை செய்கிறது.

நன்றி: கூட்டுறவு (முற்றும்)

# வளர்ந்தோர் உளவியல்

செல்வி சரோஜினி இராமசாமி

(உதவி விரிவுரையாளர் பல்கலைக்கழகம், கொழும்பு)

உளவியலிலே குழந்தை உளவியல், இளையோர் உளவியல், முதிர்ந்தோர் உளவியல் என்ற 3 பிரதான பிரிவுகள் உள்ளன. பொதுவாக உளவியலில் சிந்தனை, நனவுநிலை, நனவற்றநிலை, கற்றல், ஊக்கல், நுண்ணறிவு, ஞாபகம், கற்பனை, மெய்ப்பாட்டுநிலை, அவதானிப்புப் போன்ற பலவிதமான உளத்துடன் சம்பந்தப்பட்ட தன்மைகள் ஆராயப்பட்டாலும் கூட இவற்றையெல்லாம்விட சுவாரசியமானதும், முக்கியமானதும். ஆளுமையைப் (Personality) பற்றிய விளக்கங்களாகும். முதிர்ந்தோர் என்ற நிலைமையினையும் ஆளுமை விருத்தி என்ற நோக்கில் வைத்துப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

ஆளுமையைப் பற்றிய உளவியல் ரீதியான விளக்கத்திற்கு வருமுன்னர், ஆளுமை என்ற சொல்லுக்கான உளவியற் கருத்தினை சற்று விளக்கிவிடுவது நல்லது. அதாவது சாதாரண பேச்சு வழக்கில் நாம் நல்ல கம்பீரயான தோற்றமுள்ள, யாரையும் கவரும் ஆற்றல்மிக்க ஒருவரை நல்ல பெர்சனலிடி உள்ளவர்கள் என்று கூறுகிறோம். அதாவது தோற்றத்தை வைத்து பெர்சனடியைக் கணிக்கின்றோம். எனவே சாதாரண வழக்கில் குறிப்பிட்ட சிலருக்குதான் ஆளுமை இருக்கின்றது என்ற விளக்கம் வந்துவிடுகின்றதல்லவா? ஆனால் உளவியலில் அவ்வாறு நாம் ஆளுமையை நோக்குவதில்லை. உளவியல் ஆளுமை என்பது மனித வளர்ச்சியோடு தொடர்பு பட்டது. அது எல்லா மனிதரிலுமே காணப்படுவது. எனவே உளவியலைப்பொறுத்தவரை பெர்சனலிடி உள்

ளவர் என்ற ஒரு தனி வர்க்கம் கிடையாது. யாவருக்குமே, மனித ஜீவராசிகள் யாவருக்குமே பெர்சனலிடி உண்டு. எனவே இனிமேல்கூறப்போகும் கருத்துகட்கும் பின்னணியாக இந்த உளவியல் உண்மையினை மனதில் கொண்டிருப்பது அவசியமாகும்.

உளவியலின் தந்தையான சிக்மன்ட் பிராய்ட் (Sigmand Freud) என்பவரின் விளக்கத்தினை நோக்கினால் அவர் ஆளுமை என்பது பிறப்பிலிருந்து இயற்கையாக ஏற்படும் ஒன்றல்ல, குழந்தை பிறந்ததிலிருந்து அதன் 7 வயதுவரையிலான காலத்திற்குள் உலக அனுபவம் எவ்வாறு அமைகின்றதோ அதன் பிரதிபிம்பமே முதிர்ந்த வயதில் அதன் ஆளுமையாக அமையும் என்கிறார். எனவே உளவியலில் நாம் சூழலை ஒரு பிரதான கருவியாக நோக்குகிறோம். ஒவ்வொரு மனிதனின் ஆளுமைத் தன்மைகட்கும் அவன் சிறுவயது காலத்தில் வாழ்ந்த, அனுபவித்த சூழல்தான் காரணமாகின்றது.

எனவே பிராய்டின் கருத்துப்படி முதிர்ந்த நிலையிலுள்ள ஒருவனின் ஆளுமை முற்றான வளர்ச்சியினைப் பெற்று விடுகின்றது என்றும் அவ்வாறான முழு வளர்ச்சி பெற்ற ஆளுமை வெளிப்பாடுகளுக்கான அடிவித்துக்கள் அவரவரின் சிறு பிராயத்திலேயே அதிலும் பிறப்பிலிருந்து 7 வயதுக்குள்ளேயே தூவப்பட்டு விடுகின்றன என்றும் கூறுகிறார். உளவியலில் மனித மனத்தின் வளர்ச்சி, அனுபவங்களைப் பற்றி அழகான ஓர் உதாரணம் கூறப்பட்டுள்ளது. அதாவது ஒருவன் பிறக்கும்போது அவனின் உள்ளம் வெற்றுத் தாள் போன்று நிஷ்களங்கமாக இருக்கும் என்றும், அவனின் ஆரம்ப 7 வருட காலத்தில் அத்தாளில் விழும் கீறல்கள்தான் அவனது பின்னைய ஆளுமைத் தன்மைக்குக் காரணமாக இருக்கின்றன என்றும் விளக்கப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொருவருக்கும் அவரின் ஆரம்ப வளர்ச்சிக் காலம் வாழ்க்கையில் பிரதான கட்டமாக அமைகிறது. ஒருவனின் நுண்ணறிவு, சிந்தன சக்தி, சுபாவம், தேகாரோக்கியம், கற்றல் தன்மை, போன்றனவான உளவியல் கற்பிக்கப்படும் எல்லா, அம்சங்களும்

ஒன்று சேர்ந்த ஒரு தன்மை தான் ஆளுமை என்பதனால், மேற்கூறிய அம்சங்கள் திருப்திகரமாக ஒருவனுக்கு அமைய வேண்டுமாயின், அதாவது ஒருவரின் ஆளுமை நன்கு வளர்ச்சியடைய வேண்டுமாயின் அவனின் ஆரம்ப காலக் கட்டத்தில் அவனின் அனுபவம் நன்கு அமைந்திருக்க வேண்டும். ஆரம்ப கால அனுபவம் என்று எதனை இங்கு குறிப்பிடுகிறேன் என நீங்கள் கேட்கலாம். பிரதானமாக ஒவ்வொரு சிறு குழந்தைக்கும், வெளி உலகிற்கு வந்தவுடன் யாதுமறியாது இருக்கின்ற நிலையில் அன்பு, ஆதரவு, தாய்ப்பாசம், அரவணைப்பு, பாதுகாப்பு என்பன அத்தியாவசியம். வெளியுலகில் யாரையும் அறியாத அக்குழந்தையும் அதனைத்தான் எதிர்பார்க்கிறது. அப்படியிருக்கும் காரணத்தால்தான் தாய் என்பவளை அன்பின் வடிவமாக கடவுள் படைத்திருக்கிருரோ என்னமோ தெரியவில்லை. பிறந்த அக்குழந்தைக்கு அக்காலத்தில் எந்த விதமான ஏக்கமும் இன்றி மனச்சந்தோஷமானவாழ்க்கை அமைய வேண்டியது அவசியம். மனத்திற்கு மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமல்ல உடலுக்கு தேகாரோக்கியமான நிலைமை, கல்வி கற்பதற்கான ஆர்வம், எதையும் சிந்தித்து தானுகச் செய்ய முயற்சிக்கும் ஆற்றல் எல்லாமே சிறுவயதிலேயே உருவாவது அவசியம். இவைகள் யாவும் சிறப்பாக ஒருங்கமைந்த நிலைமையில் அவனின் பிற்கால வாழ்க்கைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு விடுகின்றது என்று கருதப்படுகின்றது.

உளவியலில் குழந்தை உளவியலைப் பற்றி படிக்கின்றபோது குழந்தைகள் செல்லப்பிள்ளைகளாக வளரும்போது, அல்லது பெற்ருரின் வெறுப்பிற்குள்ளான பிள்ளையாக அமைவது 1ம் பிள்ளையாக அல்லது, கடைசிப் பிள்ளையாக அல்லது 2ம் பிள்ளையாக இடம் பெறுவது, பெற்ருேரால் புறக்கணிக்கப்படுவது, இதுபோன்ற நிலைமைகள் ஒரு குழந்தையின் வாழ்க்கையை எவ்வளவு தூரம் பாதித்து விடுகின்றன என்பது நன்கு விளக்கப்படுகின்றன. இந்தத் தன்மைகள்தான் பிற்கால முதிர்ச்சி நிலைமையிலும் நிலைபெற்று விடுகின்றன. இவற்றை மேலும்

சற்று விளக்குவதாயின் பெற்ருேரால் அதிகம் செல்லம் கொடுத்து வளர்க்கப் படும் பிள்ளை அதிக பிடிவாதகுணம், எதிலும் தான் நினைத்தது கிடைக்கும் என்ற எண்ணம், பிறரை மதிக்காத சுபாவம் இவை போன்றவைகளை வளர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் உண்டு. இவற்றை பிற்காலத்திலும் தொடர்ந்து செய்யும் போது வாழ்க்கையின் ஓட்டத்தில் தோல்வி கண்டு சங்கடப்பட வேண்டிய கட்டம் ஏற்படின் அதனை ஏற்பது அவர்கட்கு கஷ்டமாக அமைந்து விடும். இது போல் பெற்ருேர்களின் வெறுப்புக்குள்ளாகி அவர்களினின்றும் புறக்கணிக்கப்படும் குழந்தை வாழ்வில் ஒரு வெறுமை, எதிலும் பற்றற்ற தன்மை, மற்றவரிலிருந்து ஒதுங்கியிருக்கும் தன்மை, பயந்த சுபாவம் இவை போன்ற அம்சநிலைகள் வளர்ச்சிபெற வாய்ப்புண்டு. இந்நிலைகள் அதன் கல்வி, சிந்தனைசக்தி, நுண்ணறிவு, ஞாபகம் இவை போன்றவற்றிலும் பாதிப்பினை ஏற்படுத்தும் என்ருல் ஆச்சரியமில்லை. ஒரு குடும்பத்தில் 1 ம் குழந்தைக்கு எப்போதுமே கவ கவனிப்பு அதிகம். அவ்வாருன நிலையில் இருந்து விட்டு 2ம் குழந்தை பிறந்ததும் பலபெற்ருர்கள் 1 ம் குழந்தைக்கு முன்பு கொடுத்த கவனிப்பினைக் கொடுக்கத் தவறிவிடுகின்றனர். இது அக்குழந்தையின் மனத்தில் ஒரு வடுவாக பதிந்து விடகூடும். இது அதன் வாழ்க்கையின் இறுதிகாலம்வரை தொடர்ந்து ஒரு வடுவாகவே இருக்கும். அதேபோல்தான் அதிக குழந்தைகளுள்ள குடும்பத்தில் கடைசி குழந்தை கவனிக்கப்படாமலோ அல்லது எல்லோராலுமே அதிகம் செல்லம் கொடுத்தோ வளர்க்கப்படுகின்ற நிலைமைகளும் ஆளுமை முதிர்ச்சி காலத்தில் பிரதிபலிப்பினை ஏற்படுத்தும் எனலாம்.

குழந்தை வயதில் அவர்கள் சிறுபிள்ளைகள், அவர்கட்கு எதுவும் தெரியாது என்ற கருத்தில் பெற்ருர்கள் எல்லாவற்றையுமே குழந்தைகட்கு செய்து கொடுக்குகின்ற தன்மையும் கூட சுயசிந்தனை, சுய ஆற்றல் சக்தி இவற்றினை அழித்துவிடுகின்றது என்று கூறலாம். இதனுல் தான் எமது கழகங்களில் வளர்ந்து பெரியவர்களான நிலைமையிலும் எந்த முடிவை

யும் சுயமாக எடுக்க முடியாத தன்மை, பெற்ரோரிடம் ஆலோசனை கேட்கும் நிலைமை இவைகள் இன்னும் காணப்படுகின்றன எனலாம. ஆனல் மேலை நாடுகளில் சிறுகுழந்தைகட்கு தீர்மானங்களெடுக்க, சுயமாக செயற்பட அதிக வாய்ப்புண்டு. எனவே அவர்கள் முதிர்ச்சியடையும் போதும் சிறப்பாக சிந்திக்க, தனித்து செயற்பட அதிக தைரிய மிக்கவராக இருக்கின்றனர். எனவே சிறுவயதில் சரியான முறையில் வளர்க்கப்படாதபோது பிற்கால வாழ்க்கையில் அவைகளெல்லாம் தடைக்கற்களாக அமைந்து விடுகின்றன.

எனவே முதிர்வயதில் ஒருவனின் ஆளுமை தன்மைகள் சிறப்பாக நன்கு அமைய வேண்டுமாயின் அவனின் சிறுவயதுகால அனுபவங்கள் அதற்கு துணை நிற்பனவாக இருக்க வேண்டும். சிறுவயது அனுபவங்கள் நன்மையளிப்பனவாக அமைய அவன் வாழும் சூழல் நன்கமைய வேண்டும். எனவே எல்லாமே ஒன்றுடன் ஒன்று பின்னியதாக தொடர்ச்சியாக வரும் ஒரு செயல்முறையாக உள்ளது. பெற்ஞேர், குடும்பம் இவற்றின் சூழல் மட்டுமல்ல சிறு குழந்தையாக இருக்கும்போது சுற்றத்தவர், பாடசாலையில் சினேகிதர், ஆசிரியர் இது போன்று அக்குழந்தையுடன் தொடர்புவைக்கும் யாவருமே அதன் அனுபவங்கட்கு காரணமாகி விடுகின்றனர். எனவே எந்த ஒன்றிலாவது சரியான அனுபவம் ஏற்படாவிட்டாலும் கூட அது முதிர்வு நிலையில் பிற்காலத்தில் தன்வெளிப்பாட்டினைக் காட்டத் தவருது.

எனவே இன்று பெரியவர்களாகியுள்ள ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் அவர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்களுக்கும் ஒரு உளவியல் பின்னணியை தேடிச் சென்ருேமாயின் நாம் நிச்சயம் அவர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொள்கின்றனர், ஏன் சிலர் அதிகம் கோபப்படுகின்றனர், ஏன்சிலருக்கு எந்த ஆத்திரமூட்டும் சந்தர்ப்பத்திலும் சாந்தமாக இருக்க முடிகிறது, ஏன் சிலர் எப்போதும் சிரித்து மகிழ்ச்சியாக இருக்கின்னர்., ஏன் சிலர் திடீரென மௌனமாகிவிடுகின்றனர். எப்படி சிலர் விரைவாக

கிரகிக்கும் ஆற்றல் கொண்டிருக்கின்றனர். எப்படி சிலருக்கு மட்டும் ஞாபக சக்தி அதிகம் உள்ளது. இப்படியாக எதனை எடுத்துக்கொண்டாலும் இதற்கெல்லாம் ஒரு உளவியல் விளக்கம் அவர்கள் வாழ்க்கையில் இல்லாமல் போகாது. எனவே முதிர்ச்சி கால மனிதனை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின், அல்லது அவனின் சில செயல்களுக்கு விளக்கம் பெற வேண்டுமாயின் நாம் அவனின் வாழ்க்கைக் காலத்தில் பின்னோக்கிச் செல்லுவது அவசியமாகின்றது. எனவே முன்பு பெற்றிருந்த ஏதோ அனுபவம் தான் அவனை இவ்வாறான ஒரு தன்மையில் நடந்து கொள்ளச் செய்கிறது என அறிந்து கொள்ளலாம்.

இங்கு நான் குறிப்பிடுவது ஒருவரின் வாழ்க்கையில் நிகழும் தீய செயல்களுக்கு அவனின் முற்கால அனுபவம்தான் காரணமாகிறது என்ற கருத்தினை அல்ல, நல்லவை, தீயவை என்ற பாகுபாடு இல்லாமல் எல்லா செயல்களும் தான் இங்கு குறிப்பிடப்படுகின்றன. சிறுவயதில் ஒருவன் பெறும் அனுபவம் என்னும்போது அதில் பெற்றோரின் பங்கு அதிகமாகும். ஏனெனில் உளவியலாளர்களே கூறியுள்ளனர் சிறுவயதிலே பெண் குழந்தை தன் தாயைப் பின்பற்றியும், ஆண்குழந்தை தந்தையைப் பின்பற்றியும் நடக்க முற்படும் என்று. எனவே தாய் தந்தையர் நடந்து கொள்ளும் வகைகளும் குழந்தைகள் மனத்தில் அழியாது பதிந்து விடுகின்றன. சிறுவயதில் குழந்தையின் கற்கும் ஆற்றல், கிரகிக்கும் சக்தி என்பன அதிகம். அதாவது நல்லது கெட்டது பிரித்தறியத் தெரியாத வகையில் எதையும் கற்கும் காலம் அது. எனவே எதையும் விரைவில் கற்றுக்கொள்ளும். அதிலும் குடும்பத்திலுள்ளவர்களுடன் தான் அதன் ஆரம்ப நாட்களில் பெரும்பகுதி கழிவதனால் அக்காலத்தில் குடும்பத்திலிருந்துதான் பலவற்றைக் கற்றுக் கொள்கின்றனர்.

எனவே சிறுவயது அனுபவம் முக்கியமாகும். அத்துடன் சிறுவயதில் ஒருவனை விரைவில் மாற்றிவிட முடியும். அதாவது ஒருவன் தீயவழியில் சென்றாலோ, அல்லது ஒரு நல்லவனை தீயவனாக்குவதோ சிறுபிராயத்தில் எளிது. ஏனெனில்

சுயமாக சிந்திக்கும் ஆற்றல் அவர்கட்கு அப்போது வளர்ச்சி பெற்றிருக்காது. ஆகையால் எதையும் அழுத்தமாகக் கூறிஞல், திரும்பத் திரும்ப கூறிஞல், அல்லது அவர்கட்கு விருப்பமான பொருட்கள் எதையும் காட்டி ஆசை காட்டிஞல் அவர்கள் மனதை மாற்றிவிடலாம். ஆகையால்தான் அவர்களின் கற்றல் போக்கிலும் பல மாற்றங்கள் ஏற்பட முடிகின்றது. அவர்கள் இளம் தண்டாக இருப்பதஞல் எதற்கும் வளைந்து கொடுக்க முடிகின்றது. ஆஞல் முதிர்ச்சியடைந்த நிலையில் ஒருவன் உடல் வளர்ச்சியில், உள வளர்ச்சியில், எல்லாம் ஒரு முதிர்கட்டத்தினை அடைந்து விட்டமையிஞல் அதற்கும் பின்னர் அவனின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவது கடினமாகிவிடும். ஏனெனில் அவனின் மனம் உறுதி பெற்று விட்ட நிலைமையில் அதில் மாற்றம் ஏற்படுவது சற்று கஷ்டம். மனிதனின் இயற்கையான சுபாவப்படி அவ்வாறன ஒரு மாற்றத்தால் தனக்கு ஏதாவது நன்மை ஏற்படும் என்றல் ஒருவேளை அம்மாற்றத்தினை ஏற்றுக் கொள்வான். இல்லையாயின் அதனை எதிர்த்தே நிற்பான்.

இளம் வயதினை விட்டு முதிர்வயதிற்கு வருகின்றபோது பெரும்பாலான மனிதர் தனக்கென சுயமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் நிலைக்கு வந்துவிடுகின்றனர். அதாவது திருமணம் செய்து குழந்தைகளை வளர்க்கக் கூடிய நிலைமைக்கு வந்துவிடுகின்றனர் எனலாம். எனவே அத்தகைய நிலைமையில் தன்னை மட்டுமல்ல, தன் மனைவியை, குழந்தைகளையெல்லாமே வழிநடத்திச் செல்லும் பக்குவத்தைப் பெற்றுவிட்ட ஒருவன் தன் வாழ்க்கையிலும் சுயமான ஒரு பாதையை ஏற்படுத்திக் கொள்ளும் அளவிற்கு முதிர்ச்சி பெற்றிருப்பான் என்று கூறலாம்தானே. எனவே அப்பாதையில் ஏதும் புதிய மாற்றங்களை ஏற்பட செய்வதாயின் அது கடினம். ஆஞல், பக்குவமாக செய்தால் எதனையும் சாதிக்கலாம் தானே. எதிலுமே தனக்கு நன்மையிருக்கிறது எனத் தெரிந்தால் மனிதன் சற்று தளர்ந்து கொடுப்பானென்பது தெரிந்ததுதானே. எனவே அவ்வாருக பக்கு

வமாக நடத்தல் தான் இத்தகைய முதிர்ச்சி பெற்றுவிட்டவர்கள் மத்தியில் ஏதும் மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

அதிலும் முதிர்வயதை அடைந்துவிட்டால் யாருக்குமே வாழ்க்கையை முற்றாக அனுபவித்துவிட்ட ஒரு எண்ணம் ஏற்பட்டுவிடும். எனவே தனக்கு எல்லாம் தெரியும், எனக்கு யாரும் சொல்லித்தரத் தேவையில்லை என்ற மனப்பான்மை ஏற்பட வாய்ப்புண்டு. அதுமட்டுமல்ல சுய கௌரவம், மதிப்பு தகமை போன்ற பலவிதமான சமூக தன்மைகளுக்கும் இந்த வயதில் வந்து சேர்ந்து கொள்ளுகின்றமையால் எத்தமாற்றமும் ஏற்பட வேண்டுமாயின் இவைகளெல்லாவற்றையும் அதாவது பல தடைகல்களை தாண்டித்தான் போக வேண்டியிருக்கும். அதிலும் இத்தகைய வயதில் நீங்கள் மேற்கொள்ளும் வழி சரியில்லை என யாரும் சொன்னால் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஆனால் எல்லா மனிதர்களுக்குமே முதிர்ச்சியடைந்த பின் இப்படித்தான் இருப்பார்கள் என்று கூறிவிட முடியாது. ஒரு கையில் 5 விதமான விரல்கள் இருக்கின்றதில்லையா? அதுபோல் மேற்கூறிய நிலைமைகட்கு மாறானவர்களும் நிச்சயமிருப்பார்கள். ஆனால் பொதுவாக எதிர்பார்க்கக் கூடிய நிலைமைகளிலேயே நாம் ஆர்வம் காட்டுவதால் மேற்கூறியவற்றை கவனத்திற்கு எடுத்தல் அவசியம்.

இங்கு கூறப்பட்டவைகள் எல்லாம் யாவருக்கும் தெரிந்த உண்மைகள் போல் இருக்கின்றன அல்லவா? அதுகூட முதிர்ச்சியின் ஒரு அறிகுறிதான். எனவே இவைகள் எல்லாவற்றிலுமுள்ள உண்மைகளை சிந்தித்து பார்ப்பது தான் எதிர்கால நன்மைக்கு பயனளிக்கும்.

*[''வளர்ந்தோர் கல்வியின் முறைகளும் கிளை நுட்பங்களும்'' என்னும் விடயம் குறித்து இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட உரை]*

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு

மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

வாடகைக் கட்டணங்கள்

| | | | |
|---|---|---|---|
| நாடகம் நடனம் | | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | | 250–00 |
| | பகல் | ,, ,, | 200–00 |
| இசை நிகழ்ச்சிகள் | | | |
| | இரவு | ,, ,, | 175–00 |
| | பகல் | ,, ,, | 150–00 |
| ஏனைய நிகழ்ச்சிகள் | | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | | 100–00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | | 40–00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | | 75–00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | | 30–00 |
| இருமணம் - பகல் அல்லது இரவு | | | |
| | முதல் 3 மணித்தியாலங்கள் | | 250–00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | | 50–00 |
| பிணை | இரவு | | 150–00 |
| | பகல் | | 100–00 |

குறிப்பு : கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசீய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக் குழு)

12, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்.

தொலைபேசி :
7238



Published by the Jaffna District Committee, Nationa Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as th Northern Div. Co-operative Federation Ltd.), 12, K.K.S. Road, Jaffna and Printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna, (formerly Northern